480

Regd. No. M. 1530

# BALAVINODINI

OR

## THE CHILDREN'S FRIEND

An Illustrated Tamil Monthly for Children

TO INSTRUCT AND CHERISH
THE YOUNG HEARTS WITH SWEET INSPIRING
AND
EDUCATIVE NOVELTIES

Vol. IV] JULY 1922 [No. 7

EDITED BY
VARAKAVI TIRU
A. SUBRAMANYA BHARATI

PUBLISHED BY
SRI BALASUBRAMANYAM & Co.,
Royapettah P. O., MADRAS.

...ion Inland Rs. 1—8
Foreign Rs. 2—0

JAN 1924
SL
LL,9C M211, N14
N22.4:7
18455

# பாலவிநோதினி

## குழந்தைகளின் அன்பன்

| | | |
|---|---|---|
| வருடசந்தா தபாற்கூலி யுட்பட | இந்தியா, பர்மா, சிலோன் ... | ரூ. 1 8 0 |
| | பினங்கு, சிங்கப்பூர் முதலிய வெளிநாடுகளுக்கு | ரூ. 2 0 0 |
| தனி சஞ்சிகை .. | ... விலை | ரூ. 0 2 6 |

1. பத்திரிகைக்கு ஜனவரிமீ முதல் டிசம்பர்மீ வரையில் ஒரு வருஷக்கணக்கு. எந்தமாதத்தில் சேர்ந்தாலும் ஜனவரி மாதம் முதற்கொண்டே சஞ்சிகைகள் அனுப்பப்படும். பாதி வருஷத்திலிருந்து சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது. ஒரு வருஷத்திற்குக் குறைந்த சந்தா கிடையாது.

2. சந்தாதாரராய்ச் சேருகிறவர்கள் முழு விலாசத்தையும் தெளிவாய் எழுதி யனுப்பவேண்டும்.

3. சந்தாத்தொகையை முன்னாடி செலுத்தியாவது அல்லது வி.பி. யில் கட்டியாவது பத்திரிகையை பெற்றுக்கொள்ளலாம்.

4. வி. பி. யில் பெற்றுக்கொள்வதால் அணா மூன்று அதிகமாய் செலவாகிறபடியால் சந்தாத்தொகையை மணியார்டர் செய்வதே நலம். இது முக்கியமாய் கவனிக்கவேண்டியது.

5. யாருக்கேனும் சஞ்சிகை சேராவிட்டால் ஒரு மாதத்திற்குள் தெரிவித்தால்தான் மறுபடி யனுப்பக்கூடும்.

6. இடம் மாறும் சந்தாதாரர்கள் அடுத்த சஞ்சிகை தங்களுக்குப் புதுவிலாசத்திற்கு வந்து சேரும்வண்ணம் தபாலாபீஸோடு ஏற்பாடுசெய்துகொண்டு நமக்குப் புதுவிலாசத்தை யறிவிக்கவேண்டும்.

7. சந்தா நெம்பரைக் குறிக்காமல் எழுதும் கடிதங்கள் கவனிக்கப்படமாட்டா.

### விளம்பர விகிதம்.

| | | | |
|---|---|---|---|
| ஒரு பக்கத்திற்கு ஒரு மாதத்திற்கு | ... | ரூபா. | 10—0—0 |
| அரைப் பக்கத்திற்கு ,, | ... | ,, | 6—0—0 |
| கால் பக்கத்திற்கு ,, | ... | ,, | 3—0—0 |

விலாஸம்:—மானேஜர்—பாலவிநோதினி ஆபீஸ்,
இராயப்பேட்டை போஸ்டு, சென்னை.

உ

செந்திலாண்டவன் திருவடி துணை.

# பாலவிநோதினி

அல்லது

## குழந்தைகளின் அன்பன்

ஒரு மாதாந்தப் பத்திரிகை

தொகுதி 4 | 1922ஆ ஜூலைமீ | பகுதி 7

காப்பக
186455
சென்னை-600 00

### நரசிங்க அவதாரம்

* (168-ம் பக்கத் தொடர்ச்சி)

பிரகலாதன் தந்தையைப் பணிந்து, "நான் புதிதாகவாவது அதிசயமாகவாவது ஒன்றும் சொல்லவில்லை. குருவானவர் புதிய வழியொன்று கற்பிக்கத் தொடங்கினார். அதை நான் தவறென்று விடுத்து, வேதங்கள் ஆரம்பத்தில் எந்த நாயகனுடைய பெயரை ஓதுகின்றனவோ, அதுவே

* 161-ம் பக்கம்—தம்பியான இரணிய கசிபு என்றிருப்பதைத் தமையனான இரணியகசிபு என்று படிக்கவும்.

3C
LL,9C...
M22

அறியவும், எண்ணவும், கேட்கவும், (1) கட்டுரைத்துச் சகல துன்பங்களினின்று நீங்கவும் தக்கதென்று தீர்மானித்துச் சொன்னேன்" என்றான். இரணியன் சிறிதுநேரம் மௌனமாயிருந்து, "வேதியன் நமது உத்தரவை மீறித் தகாததைப் போதிக்கமாட்டான். அப்படியிருக்கக் குழந்தைமட்டும் தகாததைச் சொல்ல அதற்கென்ன தெரியும்? நாம் இதைக் குழந்தை வாயைக்கொண்டே அறியவேண்டும்" என்று "நினைத்து, அப்பா! நீ என்னதான் சொன்னாய்; அதை என் முன் பயப்படாமல் சொல். தப்பாயிருந்தால் திருத்திக் கற்றுக்கொடுக்கிறேன்" என்றான். பிரகலாதன், "அண்ணலே! நாம் கோரும் இம்மை மறுமைப்பயனைக் கொடுக்கவல்லதும், மோட்ச இன்பத்தை அளிக்கத்தக்கதும், யாகங்களில் வேண்டும் பயனைக் கைகூட்டுவிப்பதும் எந்த நாயகனுடைய திருநாமமோ, அந்தத் திருநாமம் "ஓம் நமோ நாராயணாய" என்று வேதங்களை ஓதியுணர்ந்த பெரியோர்கள் சொல்லுகின்றனர். மேல் கீழ் நடுவென்னும் மூன்றுலகிலுமுள்ள சராசரங்கள் யாவும் நடைபெறுவது இப்பெயரின் மகிமையினாலேதான். தன்னைத்தானறியுஞ் சக்தி வாய்ந்தவர்க்கன்றி ஏனையோர்க்கு இது விளங்குவதரிது. அத்தன்மையான பெயரையே நாமனைவரும் சுகப்படும்படி எடுத்துச் சொன்னேன்" என்றான். அதைக் கேட்ட இரணியன் "இவனென்ன விபரீதமாகப் பேசுகிறான்?" என்று சற்றுநேரம் யோசித்துக் "குழந்தாய்! நீ சொன்ன பெயருக்குரியவன் ஆக்கல், அழித்தல், காத்தல் என்கிற மூன்று தொழில்களுக்கும் அதிகாரிகளான பிரமா, சிவன்,

(1) கட்டுரைத்து—உறுதியாகச் செபித்து.

விஷ்ணு என்பவரில் ஒருவன். தவம் புரிந்த (1)சேதனரே சந்திரன், (2)ஆதித்தன், சிவன், பிரமன், விஷ்ணு இந்திராதிதேவர் என்கிற பதவிகளுக்கு வருகின்றனர். நானோ எவரும் செய்தற்கு அரிய தவம்செய்தபடியால் அந்த மூன்று தொழிலுக்கும் கர்த்தாவாய் விட்டேன். நான் கர்த்தாவானதும் அந்த மூவரும் தங்களதிகாரத்தை இழந்து என்னுடைய குற்றேவலுக்குரியவரானார்கள். அவர்களில் விஷ்ணுவென்பவன் மகா (3)காதகன். நமது குலத்துக்கே (4)வைரியாயிருக்கிறான். அநியாயமாய்த் தீரசூர வீரனான உன் சிற்றப்பனைக் கொன்றான். அந்தப் படுபாவியை அதம்புரிய நான் எவ்வளவோ முயற்சிசெய்து வருகிறேன். அவன் ஜலத்தில் புகுந்து பதுங்கிக்கொண்டிருக்கிறான். என்முன் வரும் (5)ஆற்றல் அவனுக்கில்லை. அந்தத் துரோகியின் பெயரை ஓதவா நான் உன்னைப் பிள்ளையாகப் பெற்றேன்? மகனே! அவனைக்கனவிலும் இனி நினையாதே. பாம்பின் பெயரை எலி சொல்வதுண்டோ? நீ இன்னும் அறியாப்பிள்ளை. ஆதலால் குலாபிமானம் கொள்ளாமலிருக்கிறாய். குலம் விளங்கவல்லவா மைந்தரைப் பெறுவது? நீ தெரியாமற் செய்த பிழையை மன்னித்தேன். உன் வாத்தியாரிடம்போய் அவர் கற்பிப்பதைக் கற்று வரக்கடவாய்" என்றான்.

பிரகலாதன் "என் அன்பார்ந்த தந்தையே! நான் வயதிற் சிறியவனாயினும் தங்களுடைய திருவருளால்

---

(1) சேதனரே=அறிவுடையவரே.
(2) ஆதித்தன்=சூரியன்.
(3) காதகன்=கொலைசெய்வதற்கு அஞ்சாதவன்.
(4) வைரி=பகையாளி.
(5) ஆற்றல்=வல்லமை.

தக்க அறிவைப் பெற்றவனுயிருக்கிறேன். விளையும் பயிர் முளையிலே தெரியும் என்னும் பழமொழி என் போன்றவர்க்கு ஏற்பட்டதல்லவா? ஐந்தி லறியாதவர் ஐம்பதிலா அறியப்போகின்றனர்? நான் தப்பாக ஒன்றுஞ் சொல்லவில்லையே. அவசரப்படாமல் நான் சொல்வதைக் கவனித்துக்கேளுங்கள். நமக்கு நன்மையுண்டாகும்" என்று தத்துவ மார்க்கத்தைச் சவிஸ்தாரமாக விரித்துரைத்தான்.

இம்மொழி இரணியனுக்குப் பெருங்கோபத்தையுண்டு பண்ணிற்று. "வளர்த்தகடா மார்பிற்பாய்வது போல் என் பிள்ளையே எனக்கு விரோதியானல் வேறு பகையும் எனக்கு வேண்டுமோ? கொஞ்சமும் முன்பின் பாராமல் என் சத்துருவுக்கு (1)மித்துருவானன். இவன் கெட்டான் துரோகி. இவன் உறவே நமக்கினி வேண்டாம். ஆரடா சேவகா? சீக்கிரம் கொலையாளரைக்கூப்பிடு" என்று இடி யிடித்ததுபோல் கடுகடுத்துரைத்தான். உடனே எமனும் நடுங்கத்தக்க கொலையாளர் ஓடிவந்து அரசனைப்பணிந்தனர்.

"இந்த க்ஷணமே இந்த அதனப்பிரசங்கியான பயலைப் பிடித்துக் கொண்டுபோய் உங்களாயுதங்களால் கண்டதுண்டஞ் செய்து, நாய் நரி கழுகு பேய் முதலியவற்றிற்கு இரையாக்குங்கள். தாக்ஷண்யம் என்பதே அணுவுங் காட்டவேண்டாம்" என்று இரணியன் உத்தரவிட்டான். அவ்வாறே அக்கொடியவர்கள் மழு, வாள், ஈட்டி முதலிய ஆயுதங்களைக்கொண்டு பிரகலாதனைச் சித்

---

(1) மித்துரு—சிநேகன்.

திரவதை செய்யத்தொடங்கினர். அவ்வாயுதங்கள் மைந்தனுக்கு யாதொரு தீங்குஞ் செய்யவில்லை.

*"சார்புணர்ந்து சார்பு கெடவொழுகின் மற்றழித்துச்
சார்தரா சார்தரு நோய்"

என்பது வீண்போமா?

பிரகலாதன் தன்னை மல்லர்கள் இம்சிக்குந்தோறும் "ஹரி! கோவிந்தா! மாதவா! புண்டரீகாக்ஷா! ஆபத்சகாயா" என்று பகவானுடைய நாமங்களைச் சொல்லிக்கொண்டு வேறு சிந்தனையின்றியிருந்தான். அவன்மீது பிரயோகித்த ஆயுதங்கள் யாவும் சிதைந்து பொடிப்பொடியாயின. உத்தமரை அதமர்கள் வைத வசைமொழி எப்படிப் பயனற்றுப்போமோ அப்படி ஆயுதங்கள் போனதைக்கண்ட மல்லர்கள் ஓடோடிப்போய் இரணியேசுவரனைப்பணிந்து, "மகேசுவரா! நாங்கள் பிரயோகித்த பெரும் படைக்கலம் யாவும் முறிந்து போயின. தங்கள் பிள்ளையின் மேனிக்கோரானியும் உண்டாகவில்லை" என்றனர்.

இரணியன், "ஆ! ஹா! அப்படியா? திருட்டுப்பயல்-ஏதோ மந்திர பலத்தால் ஆயுதங்களின் வலியை அடக்கிவிட்டான். பெருங் குழிவெட்டி அதில் குங்கிலியம் விறகு முதலியவை யிட்டு எரித்து, எண்ணெய்க் கொப்பரையை ஏற்றி, குடங்குடமாக எண்ணெயை ஊற்றி, கொதிவரும் சமயத்தில் இந்தத்துஷ்டனைக் குண்டு கட்டாய்க்கட்டி அதில் தூக்கிப்போடுங்கள். ஒழியட்டும்" என்று கட்டளையிட்டான்.

* உண்மையும் நிலையானதுமான ஆதாரவைத் துணையாகக் கொண்டு, மற்ற ஆதரவுகளை விட்டு ஒழுகவல்லவரை பிறவித் துன்பங்கள் அணுகமாட்டா.

அவ்வண்ணமே ஏவலாளர் செய்தனர். அப்போது யாவரும் பிரமிக்கும்படி, பாலகன், ஸ்ரீ ஹரீ ! என்று பாரந் தாமனைத் தொழுது நின்றனன். ஆஞ்சநேயரின் வாலில் இராக்ஷஸர் துணி சுற்றித்தியிட் டெரித்தபோது சீதா பிராட்டியின் திருவாக்கின்படி அத்தீயானது அவர் வாலைச் சுடாதிருந்து எப்படிக் குளிரச் செய்ததோ அப்படி இந்த நெருப்பும் மைந்தனுக்குக் குளிர்ந்திருந்தது. இதைப் பணியாளர் மூலமாயறிந்த இரணியகசிபு அக்கினியைக் கட்டிச் சிறையிலிடச் செய்து அஷ்ட நாகங்களை வரவழைத்துப் பிரகலாதன்மே லேவினன். அவை அந்தப் புனிதனைக் கடித்து, பற்கள் விழப்பெற்று வருந்தலாயின. அன்பனுக்கோ பழுதொன்று முண்டாகவில்லை. பகவானுடைய திருநாமத்தைப் படிப்பவருக்கு யாது குறை? அந்நாமம்,

*" குலந்தருஞ், செல்வந்தந்திடும்,
அடியார் படுதுயராயினவெல்லாம்
நிலந்தரஞ் செய்யும், நீள்விசும் பருளும்,
அருளொடு பெருநில மளிக்கும்,
வலந்தரும், மற்றுந் தந்திடும்,
பெற்ற தாயினும் ஆயின செய்யும்,
நலந்தருஞ் சொல்" அல்லவா ?

---

* நல்ல குலத்தைக்கொடுக்கும், செல்வப பொருளையளிக்கும், அன்பர்களுக்கு நேரிடும் கொடிய துன்பங்களனைத்தையும் போக்கும், நெடிய சுவர்க்கத்தைக் கொடுக்கும், கிருபையுடன் முத்தியுலகத்தையளிக்கும், வெற்றியுண்டாக்கும், இன்னும் வேண்டியவற்றைத்தரும், பெற்றெடுத்த தாயைப்பார்க்கிலும் வேண்டிய நன்மைகளைச் செய்யும், இதா நலங்களையும் கொடுக்கும் திருவார்த்தை.

இவ்வதிசயத்தையுங் கண்ட (1)கனகேந்திரன் பெரிதும் நகைத்து, "நல்லது! (2)அஷ்டகஜங்களை இப்பையன்மேல் விடுங்கள்" என்றான். அக்(3)கரிகள் (4)வெகுண்டு கிளம் பியதும் அன்பன் அவற்றை நோக்கி,

*" எந்தாய் பண்டோர் இடங்கர் விழுங்க
முந்தாய் நின்ற முதற்பொருளே! யென்று
உந்தாய் தந்தை யினத்தவன் ஓத
வந்தான் என்றன் மனத்தினன் என்றான்."

உடனே யானைகள் அறிவறிந்த மகவினை வலம்வந்து பணிந்து நின்றன. யானைகள் இவ்வாறு செய்ததைக் கேள்வியுற்ற (5)தானவர் பெருமான் அவற்றைக் கொல் லும்படி உத்தர விட்டான். இக்கொடிய தண்டனைக்குப் பயந்த (6)வேழங்கள் (7)அறிஞனை எதிர்த்து (8)நவிவுற் றன; கொம்புகளால் பாலகன் மார்பைக்குத்தின; அப் போது, அவற்றின் கொம்புகள் வாழை மரத்தின் இளங்

(1) கனகேந்திரன்=இரணியன்.
(2) அஷ்ட கஜங்கள்=எட்டுதிக்கு யானைகள்.
(3) கரிகள்=யானைகள்.
(4) வெகுண்டு=கோபித்து.
(5) தானவர் பெருமான்=இரணியன்.
(6) வேழங்கள்=யானைகள்.
(7) அறிஞனை=பிரகலாதனை.
(8) நவிவுற்றன—துன்பமடைந்தன.

* யானைகளே, உங்கள் தாய்தந்தையரின் வமிசத்தைச் சேர்ந்த ஒருவனை முன்பொருசமயம் ஒரு முதலை பிடித்து விழுங்க நின் றபோது, அவன் எல்லாவற்றிற்கும் ஆதாரமானவனே, எமது சுவாமியே, என்று முறையிட்டுக் கத்தினான். அப்போது அந்தக் கஜேந்திரன்முன் தோன்றி அவன் துன்பத்தை யொழித்தருளி யவன் என் மனதில் குடிகொண்டிருக்கிறான்—என்றான்.

தண்டுகள் ஒடிவதுபோ லொடிந்துபோயின. பிரகலாதன் ஆனந்தமாகப் பகவானைப் புகழ்ந்துகொண்டிருந்தனன். இந்த விநோதத்தையும் பார்த்த (1)அசுரேந்திரன், "மல்லர்காள்! இவனை இப்படிச்செய்வதில் எப்படியோ தப்பித்துக்கொள்ளுகிறான்; ஆகையால் பெரும் பாறையொன்றைக் கொண்டுவந்து அத்துடன் இவனைச் சேர்த்துக் கட்டி நடுக்கடலில் எறிந்துவிடுங்கள்; ஒழியட்டும் அடியோடு" என்றான். ஏவலாளர் அங்ஙனமே செய்தனர். அந்தக் காலத்திலும் அன்பன், பகவானுடைய திருநாமத்தை மறவாதிருந்தான். அவனுக்கு அந்தச் சமுத்திரம் மடுவைப்போலும், பெரும்பாறை ஒரு மரக்கலம் போலும் விளங்க, அதில் அவனிருந்துகொண்டு,

(2)"ஆதிப்பண்ணவன் ஆயிர நாமம்
ஓதுற்றான்".

இரணியன், "என்ன இவன் நாம் செய்துவந்த சூழ்ச்சிகள் ஒன்றாலும் மடியவில்லை. இன்னும் பார்ப்போம்" என்று கொடியவிஷத்தைக் கொண்டுவந்து குடிப்பித்தான். அதனாலும் தன் எண்ணம் நிறைவேறவில்லை. செக்கிலிட்டாட்டினான். அதுவும் பயனற்றுப்போயிற்று. உடனே பெருங் கோபங்கொண்டவனாய் "இந்தத் தூர்த்தனை நானே என் கையால் கொல்லுகிறேன்" என்று எழுந்தோடிவந்தான்.

அவனைக் கண்டதும் பிரஹ்லாதன் தன் கரங்களைக் கூப்பி வணங்கி "எந்தையே! என்னை உம்மால் கொல்ல முடியாது. ஏன் வீணான பிரயத்தனங்களைச் செய்து

---

(1) அசுரேந்திரன் = இரணியன்.
(2) ஆதிப்பண்ணவன் = முதற்கடவுளின்.

ஆயாசத்தைத் தேடிக்கொள்ளுகிறீர். எல்லா உலகங்களை யுந் தந்தருளியவன் எவனோ அவனே சகலமும் காக்க வும் அழிக்கவும் வல்லவன்'' என்றான்.

இதைக் கேட்டதும் (1)கனகன் "அடா! மூடா!"

*"எவரே உலகந் தந்தார்? என் பெயர் எத்திவாழும்
மூவரே யல்ல ராகில் முனிவரே? முழுதுந் தோற்ற
தேவரே? பிறரே யாரே? செப்புதி தெரிய'' என்றான்.

பிரகலாதன் மிக்க விநயமாக,

†"உலகுதந்தானும் பல்வேறுயிர்கள் தந்தானுமுள்ளுற்
றுலைவிலா வுயிர்கள்தோறும் அங்கங்கே யுறைகின்றானும்
மலரினில் வெறியும், எள்ளில் எண்ணெயும் மற்றுங்கேளாய்
அலகில் தொல்புகழும் பற்றி முற்றிய ஹரிகாண் அத்தா!''

என்றான். "அப்படியாயின் அவன் எல்லா இடத்திலும் காணப்படவேண்டுமே? ஏன் தோற்றவில்லை?'' என்று இரணியன் கேட்டான். அதற்கு மைந்தன்,

"என் கண்ணால் நோக்கிக் காண...
செங்கணும் உளன்கா... ...தை
உன்கண் நான் அன்பின் ...ஓதல்
(2)உறுகோளென் று...கில்லாய்

...ஆவணக் காப்பக நூ...
186455
சென்னை-600 003

(1) கனகன் = இரணியன்.

(2) உறுகோள் = உறுதிப்பொருள்.

*உலகங்களைத் தந்தருளியவர் யாவர்? என் பெயரைத் துதி செய்துகொண்டு ஜீவிக்கும் மும்மூர்த்திகளா? அல்லது முனிவர்களா? எனக்கு முற்றும் தோல்வியடைந்த தேவர்களா? அல்லது பிறரா? யாவர்? வெளிப்படையாகச் சொல்.

† எல்லா வுலகங்களையும் படைத்தவனும், அநேகமான வெவ்வேறு ஜீவராசிகளை யுண்டுபண்ணினவனும், முடிவில்லாத அந்த ஜீவராசிகளுக்குள் அந்தர்யாமியாய் அங்கங்கே இருப்பவனும், பூவில் மணமும், எள்ளில் எண்ணெயும் போல எல்லையற்ற பழமையான பிரபாவத்தைக் கொண்டு பரிபூரணமாய் எங்கும் நிறைந்த ஸ்ரீ ஹரி என்னும் திருநாமத்தையுடைய பகவான் ஆவன்.

உன் கண்ணால் நோக்கிக் காண்டற்
கெளியனே உனக்குப் பின்னேன்
(1)பொன்கண்ணன் ஆவியுண்ட
(2)புண்டரீகக் கண் அம்மான்''

அந்தப்பரம்பரன்,

''சாணினும் உளன் ஓர் தன்மை அணுவினைச் (3)சதகூறிட்ட
(4)கோணினும்உளன் மாமேருக் குன்றினும் உளன் இந்நின்ற
தூணினும் உளன் முன் சொன்ன சொல்லினும் உளன்
இத்தன்மை காணுதி விரைவிலென்றான்—''

உடனே இரணியன் "நன்று சொன்னாய். உனக்கும் தேவர்களுக்கும் அநுகூலனாய் எங்கும் பரந்து இருப்பவனை இத்தூணிடம் நீ காட்டாமற் போவாயாகில், பிறகு எப்பாடுபடுகிறாயோ அதை நீயே பார்த்துக் கொள்ளலாம்'' என்று பெருநகை செய்து, தூணைப் புடைத்தான்.

அந்த நிமிஷமே தூணைப் பிளந்துகொண்டு பகவான் நரசிங்க வடிவத்தோடு வெளிப்பட்டனன்.

அப்போது,

''நாடி நான் தருவன் என்ற நல்லறிவாளனாகிய பிரகலாதன்
தேடிநான் முகனுங் காணாச் சேயவன் சிரித்த லோடும்
ஆடினான் அழுதான் பாடி யாற்றினான் சிரத்திற் செங்கை
சூடினான் தொழுதான் ஓடி யுலகெலாந்(5)திகைத்தான் துள்ளி.''

பிறகு மைந்தன் தன் தந்தையை நோக்கி,

---

(1) பொன்கண்ணன்=இரணியாக்ஷன்.
(2) புண்டரீகக் கண்=தாமரைக் கண்களையுடைய.
(3) சதகூறு=நூறுபங்கு.
(4) கோணினும்=ஒவ்வொருபாகத்திலும்.
(5) திகைத்தான்=புழுதிகிளம்பக் கூத்தாடினான்.

"கிடையாக் காட்சியும் கிடைத்திருக்கின்றது
கிட்டித் தொழு தய்யவே வாரும்—இன்னுந்
தடையா? எனைத்தந்த தந்தையே நமது
சஞ்சலங்களினித் தீரும்"

என்று பிரார்த்தித்தான்.

இரணியன் அப்பேச்சுக்குக் காதுகொடாமல் பகவானுடன் போரிட நெருங்கினான். முடிவில் பகவான் அவனை அந்திநேரத்தில் அவனுடைய கிருகத்தின் வாயிலில் தனது அழகிய தொடையின்மீதேந்தி அவனது வயிரம் பொருந்திய மார்பைத் தீயெழும்படி பிளந்து நீக்கித் தேவர்களின் துயரத்தைத் தீர்த்தருளினன்.

தேவர்கள் பூமழை பொழிந்தனர். முனிவர்கள் பல்லாண்டு பாடினர். ஜெகன்மாதாவாகிய மகாலக்ஷ்மியை எழுந்தருளுமாறு துதித்தார்கள். தாயார் பிரசன்னமானதும் அவளைப் பகவானுடன் சேர்த்து மங்களங் கொண்டாடினர்.

பகவான், பிரகலாதனை மிக்க அன்புடன் பார்த்து, "அன்பா! உன் தந்தையை உன்முன்பாகவே கொன்று உடலைப் பிளந்தபோது நீ ஒரு சிறிதும் மனங்கோணா திருந்தாய். உன் அன்பிற்கு மெத்தவும் மகிழ்ந்தேன். இனியுன் குலத்தோரை எக்காரணம் பற்றியும் நான் கொல்லமாட்டேன். உனக்கு வேண்டிய வரத்தைக் கேட்பாயாக" என்றனன். பிரகலாதன், வணங்கி,

"முன்பு பெறப் பெற்ற (1)பேறோ முடிவில்லை
பின்பு பெறும் பேறு முண்டோ பெறுகுவனேல்
(2)என்பு பெறாத இழிபிறவி யெய்திடினும்
அன்பு பெறுகை யரும்பேறெனக்கென்றான்."

---

(1) பேறு=வரமோ.

(2) என்பு=எலும்பு.

பகவான் சந்தோஷித்து "அப்படியே யாகுக. நீ என் போல எக்காலத்தும் ஆனந்தத்தோடிருந்து அரசு செலுத்தி வரக்கடவாய். தேவர்களுக்கும் நீயே அதிபதி. உன் புகழைச் சொல்வோர் எல்லா நன்மைகளையும் அடைவர். உனக்கு அன்பராவோர் எனக்கும் அன்பராவர்" என்று வாழ்த்தி வரந்தந்து மறைந்தருளினர்.

இதனல் கடவுள் இல்லை யென்றும், நாமே கடவுளென்றும் பேசுவது தவறென்றும், பகவான் எங்கு மிருக்கிறார் என்பது உண்மையென்றும் நாம் தெரிந்து கொண்டோம். மற்றும் அவரை நம்பினவர்க்கு யாதொரு கெடுதியும் நேரிடா தென்றும் அறியலானேம். ஆகையால் நாம் பகவானை எப்போதும் வாயார வாழ்த்தி, மனதார நினைத்து, சகல துன்பங்களிலிருந்தும் நீங்கி, இன்பத்துடன் வாழ உடன்படுவோமாக.

---

## ஈசனிடம் மன்னிப்புக் கேட்டல்

"சொல்லால் வருங்குற்றம் தீவினையால்வருந் தோடஞ்செய்த
பொல்லாத தீவினை பார்வையிற் பாவங்கள் புண்ணியநூ
லல்லாத கேள்வியைக் கேட்டிடுந் தீங்குக ளாயவுமற்
றெல்லாப் பிழையும் பொறுத்தருள் வாய்கச்சி யேகம்பனே"

(பட்டணத்தார்.)

## கிடாமாட்டுப்பால் கிடைக்கும்போது புருஷன் பிள்ளைபெறுவது வியப்பா?

---

ஒருநாள் ஓர் அரசன் தன் மந்திரியைப்பார்த்து "நமக்குக் கிடாமாட்டுப்பால் வேண்டும்" என்று சொன்னான். மந்திரி, முடியாது என்று சொன்னால் அரசனுக்குக்கோபம் வந்துவிடு மென்று நினைத்து "உத்தரவின்படியே கொண்டுவருகிறேன். ஆனால் ஒருவாரம் தவணை வேண்டும்" என்று வேண்டினான். உடனே தவணை கொடுக்கப்பட்டது. மந்திரி வீடுசென்று ஒன்றும் தோன்றாதவனாய் விசனப்பட்டுக்கொண்டிருந்தான். அவன்மனைவி மகாபுத்திசாலி. தன் கணவன் முகக்குறிப்பறிந்து பக்கத்தில் வந்து "நாதா, தாங்கள் ஒருவாறு முகவாட்டத்துடனிருருப்பதற்குக் காரணம் என்ன? ராஜக்ரகத்தில் ஏதாவது தவறு நடந்ததா?" என்று வெகு பணிவாய்க் கேட்டாள்.

மந்திரி:—தொந்தரவு ஒன்றும் ஏற்படவில்லை. ராஜா கிடாமாட்டுப்பால் வேண்டுமென்று கேட்டார். இல்லையென்று சொன்னால் அரசனுக்குக் கோபம் வருமென்று கருதி ஒரு வாரத்தில் கொண்டுவருவதாகச் சொல்லி வந்தேன். கிடாமாட்டுப்பால் எப்படிக்கிடைக்கும்; இதற்கு என்ன செய்வது? ஒன்றும் தோன்றவில்லை" என்று சொன்னான். இதைக்கேட்ட மந்திரியின் மனைவி புன்

சிரிப்புடன் "நாதா, இதற்காகத் தாங்கள் வருந்தவேண்டாம். இது ஒன்றும் பெரிதல்ல, நான் முடித்துத் தருகிறேன் இந்தக்காரியத்தை. ஆனால் தாங்கள் எங்கேயும் வெளியே போகாமல் வீட்டிலேயே இருக்கவேண்டும்" என்று கேட்டுக்கொண்டாள்.

மந்திரி:—ஆகா, அப்படியே செய்கிறேன். எப்படியாவது காரியம் முடிந்தால் போதும்-என்று சொன்னான்.

ஆறு நாள் வரையில் சும்மாவிருந்து மந்திரியின் மனைவி. ஏழாநாள் நன்றாய் அலங்கரித்துக்கொண்டு சில துணிகளோடு அரண்மனைக்கு எதிரில் இருக்கும் குளத்திற்குச் சென்று அந்தக்குளத்தின் படிக்கட்டில் துணிகளைத் தோய்த்துக்கொண் டிருந்தாள். இதைத் தன் அரண்மனையிலிருந்து பார்த்த அரசன் "இவ்வளவு ரூபலாவண்யத்துடனிருக்கும் ஸ்திரீயார், இந்தவேளையில் இப்படித் துணிகளைத் தோய்க்கவேண்டிய காரணம் என்ன?" என்று யோசித்து ஓர் ஆளை அனுப்பி அவளை அரண்மனைக்கு அழைத்து வரும்படி கட்டளையிட்டான்.

மந்திரியின் மனைவி அரசன் முன் கொண்டுவரப் பட்டதும், அரசன் அவளைப்பார்த்து "நீ ஏன் இப்படி இந்த வேளையில் துணிதோய்க்க வேண்டும். உனக்குப் பணிப்பெண்களில்லையா இந்த வேலை செய்ய?" என்று கேட்டான்.

"மகாப்ரபோ, எங்கள் பணிப்பெண் ஒருவாரமாய் வேலைக்கு வரவில்லை. அவள் இருப்பிடமும் தெரியவில்லை. என் புருஷன் பிரஸவித்திருக்கிறார். ஆகையால் நான் இந்தவேலை செய்யவேண்டியதாயிற்று" என்று மந்திரியின் மனைவி வெகு விநயமாய்ப் பதிலளித்தாள்.

இதைக்கேட்டதும் அரசன் ஆச்சரியமடைந்து "அப்படியும் ஒரு புருஷன் நமது இராஜ்யத்திலிருக்கிறுனு! இது என்ன விபரீதமானகாலம்!" என்றுன்.

மந்திரியின் மனைவி "வேந்தே! அப்படி யொன்றுமில்லை. ஒரு மகாராஜா தன் மந்திரியைக் கிடாமாட்டுப்பால் கொண்டுவரும்படி ஆக்யாபித்திருக்கும் இக்காலத்தில் புருஷன் பிள்ளைபெறுவது ஒரு வியப்பா?" என்று மிகப் பணிவுடன் சொன்னுள்.

அரசன் உடனே "இவள் மந்திரியின் மனைவியாகத் தானிருக்கவேண்டும். நமது மூடத்தனத்தை வெளியாக்கவே இவள் இவ்விதம் செய்திருக்கிறுள்" என்று கருதி: வெட்கி அவளை உடனே பல்லக்கிலேற்றி வெகு மரியாதையுடன் வீட்டிற்குக்கொண்டு போய் விட்டுவிட்டு வரும்படி தன் பணியாளருக்குக் கட்டளையிட்டு மந்திரிக்கும் கிடாமாட்டுப்பால் வேண்டாமென்று சொல்லியனுப்பினுன்.

குழந்தைகளே:—யுக்தியும் புத்தியும் சித்திபயக்கும் என்பதை உணர்த்தும் இக்கதையை ஞாபகத்தில் வைப்பீர்களாக.

---

மேன்மையை விரும்புகிற அறிவாளிகள் ஒழுக்கத்தினுலும் அறிவினுலும் கெட்டுப்போய்ப் பாபகாரியங்களிலே உழல்பவருடைய சகவாசம் செய்வது கூடாது.

(ஆதிபர்வம்)

# ஜயதேவர்

ஜகந்நாதமென்பது ஒரு திவ்ய க்ஷேத்திரம். இதற்கு அருகே துந்துபிலவம் என்றொரு கிராமமுண்டு. இதில் ஜயதேவர் என்கிற ஒரு பிராமணரிருந்தார். இவர் சகல கலைகளிலும் வல்லவராயும் தெய்வபக்தியிலே சிறந்தவராயும் விளங்கினார். தம்மிடத்தில் வருபவர்களுக்கெல்லாம் பகவானுடைய பெருமையைப்பற்றிச் சொல்லி அவர்களையும் பக்திமான்களாக்கி நல்ல வழிக்குக் கொண்டுவருவார். இவர் வித்வானாதலால் **கீதகோவிந்தம்** என்கிற கிரந்தமொன்று கீர்த்தனைரூபமாகச் செய்திருக்கிறார். அதை எல்லோரும் கொண்டாடுவார்கள்.

இவருடைய கல்வித்திறமையையும் பக்தி விசேஷத்தையும் கேட்ட ஒரு பிரபல வியாபாரி இவரிடம் வந்து "சுவாமி என்னைச் சீடனாக ஏற்றுக்கொண்டு சத் விஷயங்களை உபதேசித்து என்னைக் காப்பாற்றவேண்டும்" என்று வேண்டினான். அவர் அவனுடைய குணங்களையும் நடவடிக்கைகளையும் விசாரித்து நல்லவனென்று தெரிந்துகொண்டபின் அவனைத் தமக்குச் சீடனாக ஏற்றுக்கொண்டு நல்ல விஷயங்களைப் போதித்து வந்தார்.

பிறகு அவர் ஒரு சமயம் அந்த வர்த்தகன் கேட்டுக்கொண்டதற்குச் சம்மதித்து அவனுடைய ஊருக்குப்

போய்க் கொஞ்சகாலம் அங்கேயே யிருந்தார். வர்த்தகன் ஜயதேவரைத் தெய்வம்போல் எண்ணி வந்தனை வழிபாடுகள் செய்து அவரை மகிழ்வித்துத் தனக்கு வேண்டியவற்றைக் கற்றுக்கொண்டான். பிறகு ஜயதேவர் தமது ஊருக்குப்போக விரும்புவதை அறிந்து அவரை ஒரு வண்டியில் பிரயாணப்படுத்தி அனுப்பினான். அந்த வண்டியில் வஸ்திரம், ஆபரணம், பணம், இன்னும் சில விலையுயர்ந்த சமான்கள் இவற்றைக் குருதக்ஷிணையாக வைத்திருந்தான். இது ஜயதேவருக்குத் தெரியாது. அவர்க்குத் தெரிந்தால் அவர் அவற்றை வேண்டாமென்று மறுத்துவிடுவார் என்று எண்ணி அவர்க்குத் தெரியாமல் அவற்றை வைத்து ஊருக்குப் போனவுடன் அவர் மனைவியிடம் கொடுத்துவிடும்படி வண்டிக்காரனிடம் சொல்லியிருந்தான்.

வண்டி ஊரைக்கடந்து கொஞ்சதூரம் போனதும் வண்டிக்காரன், ஜயதேவரைப்பார்த்து, "சுவாமி, எனக்கு என் வீட்டில் அவசரமான வேலையிருக்கிறது. அதை மறந்துவந்துவிட்டேன். அது முக்கியமான வேலை. இன்று தவறினால், அந்த வேலை வீணாய்விடும். ஆகையினால் தாங்கள் எனக்கு விடைகொடுத்தனுப்ப வேண்டும்" என்று வேண்டிக்கொண்டான். ஜயதேவர், அவனை அனுப்பிவிட்டுத் தாமே வண்டியை ஓட்டிக்கொண்டு போனார். வண்டி மெதுவாய்ப் போனபடியால் ஊருக்குப் போவதற்குள் இருட்டிப்போய்விட்டது. இருட்டில் வண்டி ஒரு காட்டில் போய்க்கொண்டிருந்தது. அப்பொழுது இரண்டுபேர் திருடர்கள் வந்து வண்டியை மடக்கிக் கொண்டு ஜயதேவரைக் காலையும் கையையும் வெட்டி

அங்கிருந்த ஒரு குட்டையில் எறிந்துவிட்டுப் போய்விட்டார்கள்.

இப்படியாகவே, ஜயதேவர் அந்தக் குட்டையிலிருந்தபடி தெய்வத்தைத் தியானம்பண்ணித் துதித்தார். பகவான் அவர்க்கிரங்கி வெட்டுண்ட அவருடைய கால் கைகளில் கொஞ்சமும் நோவில்லாதபடி செய்தார். ஜயதேவர் அதனால் பிறவியிலேயே அங்கவீனமானவரைப் போலிருந்தார்.

மறுநாள் அந்தக் காட்டின் வழியே ஒருவேந்தன் வேட்டையாடிக் கொண்டுவந்தான். அவன் ஜயதேவரைக் கண்டான்; "தாம் யார்? இங்கு இப்படிக்கிடக்க வேண்டிய காரணமென்ன?" என்று விசாரித்தான். ஜயதேவர், "நான் பிறவியிலேயே இப்படி அங்க வீனனாகப் பிறந்தவன்! இப்படியே இங்கு வந்தேன். குட்டையில் தாகத்திற்கிறங்கினேன். ஏறமுடியாமலிருக்கிறேன்" என்றுகூறினார். அரசனுக்கு அவரிடம் அநுதாபமுண்டாயிற்று. அவன் அவரைக் கரை யேற்றுவித்துத் தன் இரதத்தில் வைத்துக் கொண்டு தன் நகரத்திற்குப்போய்த் தன் அரண்மனையிலேயே இருந்துவரும்படி அவரை வேண்டிக்கொண்டான். ஜயதேவர், "**எது வந்தாலும் எது போனாலும் எல்லாம் ஈசன் செயல்**" என்றிருப்பவராகையினால் இதையும் பகவானுடைய கட்டளையாகவேகொண்டு அங்கேயே இருந்துவரத்தீர்மானித்தார். இரண்டொரு நாள் சம்பாஷணையில் அரசன் ஜயதேவருடைய மகத்துவத்தைத் தெரிந்து கொண்டான். அரசன் நல்ல விவேகசாலியாகையால் அறிவுடைய பெரியவராகிய அவரைத் தனக்குக் குருவாகக் கொண்டு வந்தன வழிபாடுகள் செய்து தான் நல்ல

வழியை அடைவதற்கேற்ற உபதேசங்களையும் பெற்று வந்தான்.

இப்படியிருக்கையில் ஒரு நாள் வேந்தன் ஜய தேவரை "ஸ்வாமி நான் தினந்தோறும் செய்துவர வேண்டிய நல்ல செய்கைகள் ஏதாயினு மிருந்தால் கட்டளையிட்டருளல் வேண்டும்" என்று கேட்டான். ஜயதேவர், "வேந்தே! உலகத்தில் ஒருவன் சாதுக்களை உபசரித்து அவர்களுக்கு வேண்டுவன உதவி அவர் ஆசீர்வாதம் பெறுவதிலும் விசேஷமான தொன்றுமில்லை. ஆகையால் சாதுக்கள் என்று யார்வந்தாலும் அவர்களை வரவேற்று அரண்மனையில் ஆசார உபசாரங்களோடு வைத்திருந்து அவர்கள் விரும்பியதைக் கொடுத்தனுப்பிவரின் போதுமானது. இது சகல நல்ல பயனையும் தரும்" என்றார். அரசன், "ஸ்வாமி அப்படியே நடப்பேன்" என்று கூறி அன்றுமுதல் அரண்மனைக்கு வரும் சாதுக்களை ஆதரவாய் உபசரித்து வந்தான்.

இவ்வாறு சில மாதகாலம் நடந்தது. அரசன் சாதுக்களை இவ்வாறு ஆதரிக்கின்றான் என்னும் செய்தி நெடுகலும் பரவியது. வரவர சாதுக்கள் ஓய்வில்லாமல் வந்துகொண்டே யிருந்தார்கள். அரசனும் வெறுப்பில்லாமல் மனமகிழ்ச்சியோடு அவர்களை உபசரித்துவந்தான். இப்படியிருக்கையில்; முன் ஜயதேவருடைய காலையும் கையையும் வெட்டி அவரைக் குட்டையிலே தள்ளிய திருடர்களிருவரும் சாதுக்களைப்போல் வேஷம் பூண்டு அரண்மனைக்கு வந்தார்கள். வந்ததும் சேவகர்கள் அவர்களை ஜயதேவரிருக்குமிடத்திற் கழைத்துக்கொண்டு போனார்கள். ஜயதேவர், அவர்களைக் கண்டதும் பணிந்து "வர

வேண்டும், வரவேண்டும்! பெரியவர்கள் வரவேண்டும்" என்று கூறி வரவேற்றுச் சேவகர்களை நோக்கி, "இவர்களை உள்ளே அழைத்துப்போய் மகாராஜாவிடஞ் சொல்லி வேண்டிய உபசரணைகளைச் செய்யச்சொல்லுங்கள் இவர்கள் பெரியவர்கள் என்றும் சொல்லுங்கள்" என்றார்.

அவர்கள் ஜயதேவரைக் கண்டபொழுதே அவர்களுடைய பாடு கஷ்டத்தில் வந்துவிட்டது. இப்பொழுது அரசனிடம் அழைத்துப்போய் உபசரணை செய்விக்கும்படி சேவகர்களுக்குச் சொன்னதைக் கேட்டதும் அவர்கள் உயிர் அவர்களிடத்தில் இல்லை. அவர்கள் ஜயதேவருக்குச் செய்த தீங்கு அவர்களைத் துன்பப்படுத்தியது. இனி என்ன செய்வார்கள்! ஆடுதிருடிய ஆண்டிகளைப் போல் விழித்தார்கள். அவர்களைச் சேவகர்கள் மகாராஜாவினிடம் கொண்டுபோய்விட்டு, ஜயதேவர் அவர்களுக்காகப் பரிந்து சொன்னதையும் சொன்னார்கள். அரசன் முன்னிற்கும் இந்த வஞ்சகருடைய உடல் அவர்களை அறியாமலே நடுங்கத் தொடங்கிவிட்டது. பேச நாவெழவில்லை. என்ன நேருமோ என்று பயந்தார்கள்; "இன்று நம்மைக் கொலை செய்துவிடுவான் இவ்வரசன்? இன்றுதான் நமது ஆயுள் முடியும் நாள். வஞ்சகத்தினால் வரும் பயனிது. முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும் என்பார்களே அது நிச்சயமாய்விட்டது" என்றெண்ணிப் பிரமித்து நின்றார்கள். அரசன் இதுவரையில் எந்தச் சாதுவையும் இப்படி யுபசரித்ததில்லை என்று சொல்லும்படி அவர்களை வந்தனத்தோடு வேண்டிய உபசரணைகள் செய்து போஜனம் செய்வித்தான்.

இவ்வாறு அகப்பட்டுக்கொண்ட இந்த வஞ்சகர்கள், அரசனுடைய அரண்மனையில் மாதக்கணக்கா யிருந்தார்கள். அரசன் சிறிதும் சலிப்பில்லாமல் நாளுக்குநாள் அதிகமாக அன்பு பாராட்டிவந்தான். இப்படியிருந்தும் அவர்கள் உடம்பு இளைத்துப் போய்க்கொண்டே வந்தது. அதைப்பற்றி அரசன் ஜயதேவரிடம் விசாரித்தான். ஜயதேவர், "அவர்களுக்கு இப்படிப்பட்ட வாழ்விலே விருப்பமிருக்காது. அவர்கள் எப்போதும் பகவானிடத்தில் சித்தமுடையவர்களா யிருப்பவர்களல்லவா:— ஆகையினால் அவர்களுடைய விருப்பத்தைக் கேட்டு இவ்விடம் விட்டுப் போகவிரும்பினால் வேண்டியதைக் கொடுத்துச் சந்தோஷப்படுத்தி அனுப்பிவிடுங்கள்" என்றார். பிறகு அரசன், அவர்களுடைய அபிப்பிராயந் தெரிந்துகொண்டு ஜயதேவரிட்ட கட்டளைப்படி வேண்டிய பொருள்களை அவர்களுக்கு விருப்பத்தோடு கொடுத்துச் சந்தோஷப்படுத்தி அனுப்பினான்; அனுப்பும்போது கொஞ்சதூரம் போய் அவர்களை வழிவிட்டுவர அவர்களுடன் இரண்டு சேவகர்களையும் அனுப்பினான்.

நால்வரும் அரண்மனையை விட்டுப் புறப்பட்டுக் கொஞ்சதூரம் போனதும் ஒருமைதானத்தை அடைந்தார்கள். அங்கே சேவகர்கள் அவர்களைநோக்கி, "சுவாமிகளே! உங்களிடம் ஜயதேவர் பரம விசுவாசம் பாராட்டி வந்ததன் காரணமென்ன?" என்று கேட்டார்கள். வஞ்சகர்கள், "நாங்களும் ஜெயதேவரும் ஓர் அரசனிடம் வேலையிலிருந்தோம். ஜயதேவர் மந்திரியா யிருந்தார். நாங்கள் சேவகர்களா யிருந்தோம். ஒரு நாள் ஜயதேவர் ஒரு சிறு குற்றம் செய்துவிட்டார். அரசன் கொடிய கோபக்

காரணுதலால் உடனே பெருங்கோபங்கொண்டு அவரைக் காட்டிற்குக் கொண்டுபோய் வெட்டிவிடும்படி எங்களுக்குக் கட்டளை யிட்டான். நாங்கள் அவரை வெட்டுவதற்காகக் காட்டிற்குக் கொண்டு போனோம். அங்கே போனதும் வெட்ட மனமில்லாமல் அவருடைய கால் கைகளை வெட்டி அவரை அங்கிருந்த ஒரு குட்டையிலே கிடத்திவிட்டு அரசனிடம் போய் "கட்டளைப்படி செய்தோம்" என்று சொல்லி விட்டோம். அதனுலேதான் எங்களிடம் அவர் அப்படி விசுவாசங்காட்டியது? உயிரைக் காப்பாற்றினேமல்லவா?" என்று கூறினர்கள்.

இப்படிக்கூறி வாயை மூடியதும் பூமி படீரென்று வெடித்து அவர்களிருவரையும் உட்கொண்டுவிட்டது. இவ்வதிசயத்தைப் பார்த்துக்கொண்டிருந்த சேவகர்கள் உடனே வேகமாகத்திரும்பி அரண்மனை வந்து ஜயதேவரிடம் நடந்ததை யெல்லாம் தெரிவித்தனர். ஜயதேவர் அதைக்கேட்டதும் "ஸ்ரீஹரி! வாசுதேவா! கோவிந்தா! கோபாலா! முகுந்தா! உன்னிடம் பகைகொண்ட இராவணனுக்கு நீ இராமாவதாரத்தில் முத்தியைக் கொடுத்தாய்? கிருஷ்ணுவதாரத்தில் சிசுபாலனுடைய குற்றங்களை யெல்லாம் பொறுத்து முடிவில் நல்லது செய்தாய்! கொடிய பகைவனுகிய கம்சனுக்கும் நற்கதியைத் தந்தாய்? அப்படியிருக்க இப்பொழுது என்னுடைய பகைவர்களாகிய இந்த சாதுக்களுக்கு அதோகதியைத் தந்தாய்? இப்படிச் செய்யலாமா! உனக்குப் பகை செய்தாலும் செய்யலாம். உன்னுடைய பக்தர்களுக்குப் பகை செய்வது கூடாதென்பதை உலகத்தவர்களுக்குத் தெரிவிப்பதற்காகச் செய்ததோ இது! அந்தோ! பரிதாபம்!" என்று கூறிக் கண்ணீர் விட்டார்.

இச்சமயம் தேவதுந்துபி முழங்கியது. தேவர்கள் மலர் மாரி பொழிந்தார்கள். ஜயதேவருக்குக் கால்கைகள் உண்டாயின. இது உடனே அரசனுக்குத் தெரிவிக்கப் பட்டது. அரசன் வியப்படைந்து அங்குத்தன் பரிவாரங் களோடு வந்தான். ஆகாயத்திலிருந்து இப்பொழுது ஒரு விமானம் வந்தது. அந்த விமானத்தில் முன் பூமியுட் கொண்ட பொய்ச் சாதுக்களிருவரும் திவ்ய அலங்காரத் துடன் வீற்றிருந்தனர். அதிலிருந்து கிருஷ்ணபகவான் கீழே யிறங்கினர். ஜயதேவர் இக்காட்சியைக் கண்டு பரமா நந்தங்கொண்டு, இருகை குவித்துத் துதித்துப் பாடினர்.

பகவான், "ஜயதேவா! உன் பக்தி சிறந்தது. உன்னி டம் பொறுமையும் அருளும் விளங்குகின்றன. பகைவரிட மும் நண்பரிடமும் நீ சமபாவனையுடையவனு யிருக்கிறுய்! இந்த பாவனை வாய்ப்பதரிது. இப்படிப்பட்ட பாவனையு டைய பக்தர்களுக்கு எப்போதும் நாம் ஸ்வாதீனமாயிருப் போம். உன்னுலே உன்னுடைய பகைவர்கள் இதோ நற் கதி பெறுகிருர்கள்! உன்விருப்பப்படி நாம் அவர்கட்கு நற்கதி தந்தோம். உனக்கு என்றும் குறைவுண்டாக்க மாட் டோம். வெற்றியும் நன்மையும் சந்தோஷமும் ஊக்கமும் தைரியமும் சாந்தமும் அருளும் உன்னைத் தொடர்ந்திருக் கும்" என்று கூறி விமானத்தோடு மறைந்தனர்.

பிறகு அரசனும் ஜயதேவரும் இதைப் பெருவியப் போடு பேசிக்கொண்டார்கள். ஜயதேவர் முன் நடந்தவெல் லாம்சொல்லி, பகைவரையும் நண்பரையும் சரிசமானமாகப் பார்க்குமொரு பாவனையே பகவானுடைய திருவுள்ளத் திற்கு மகிழ்ச்சி தருவதென்பதை நாம் உணர்ந்தோம். என்று கூறி இன்னும் ஞானமார்க்கமாக அரசனுக்குப் பல

போதனைகள் செய்தார். அரசன் உடனே ஜயதேவருடைய திருவடியிலே பணிந்து, "நான் கடைத்தேறினேன், என் பிறவி பயன் பெற்றது" என்று சொல்லித் "தாங்கள் தங்கள் மனைவியாருடன் இங்கேயே என் பக்கமிருந்து என் குடும்பத்தை அடிமையாகக் கொண்டு என்றும் ஆதரிக்க வேண்டும்" என்று வேண்டிக் கொண்டான். ஜயதேவர், "அப்படியே செய்வோம்" என்றாசீர்வதித்தார். பிறகு அரசன் ஜயதேவருடைய மனைவியை வரவழைத்து அவருக்குத் தனி விடுதி கட்டிக் கொடுத்து அதில் வைத்து அவர்களிருவரையும் பூசித்து வந்தான்.

---

## இலைகளுள் மிகவும் உபயோகமானது எது.

ஒருநாள் ஓர் அரச சமூகத்தில் பிரமுகர்களும் மந்திரிகளும் வீற்றிருக்கையில் அரசன் சபையைப் பார்த்து "இலைகளுள் மிகவும் உபயோகமான இலை எது?" என்று கேட்டான். பிரமுகர்களெல்லாரும் "வாழைஇலை; ஏனெனில் இது யாவரும் போஜனம் செய்வதற்கு உபயோகப் படுகிறது; மற்ற இலைகளுக்கெல்லாம் பெரியது. ஆகவே இதுதான் மிகவும் உபயோகமானது" என்றார்கள்.

அரசனுக்கு இவ்வுத்தரம் திருப்தி கரமாயிருக்க வில்லை. உடனே மந்திரிகளுள் ஒருவர் எழுந்து வேந்தே, இலைகளுள் வெற்றிலையே எல்லா வற்றுள்ளும் சிலாக்யமானது. அது தேவ ஆராதனையிலும் சிரேஷ்டமாகக் கொள்ளப் பட்டிருக்கிறது. தாம்பூலம் லக்ஷ்மீகரம் சதாநசிகரம் என்றும் சொல்லப் பட்டிருக்கிறது. இதை விரும்பாதார் எவருமில்லை என்று சொன்னார்.

அரசன் சாதுர்யமான இம்மறுமொழி கேட்டு மகிழ்ந்தான். பிரமுகர்களும் ஆமோதித்தார்கள்.

# அகங்காரம்.

இது நம்மை அநாதியாகவே பற்றியுள்ள அறியாமை அல்லது பேதைமையின் மூலமாக, நம்மிடம் குடிபுகுந்திருக்கின்றது. இப்படி நம்மை இயல்பாகத் தொடர்ந்து வரும் இக்கொடிய குணத்தைச் சாந்தப் படுத்தவோ அல்லது அறவே ஒழிக்கவோ நாம் முயன்றபோதிலும் நமக்கும் தெரியாமலே நம்மை ஏமாற்ற இது காத்துக்கொண் டிருக்கிறது. இது உள்ளபரியந்தம் நாம் உயர்ந்த நிலையையடைவது அசாத்தியம். இதையே பெருந்துணையாக ஆதரித்துவந்த இரணியன், இரணியாக்ஷன், இராவணன், கும்பகர்ணன், கம்ஸன், சிசுபாலன், சூரபதுமன், முயலகன் முதலிய எத்தனையோ பராக்கிரமசாலிகள் மானங்கெட்டு மதிகெட்டு எல்லோராலும் இகழப்பெற்றும் போயினர்.

அகங்காரத்தால் இவ்வண்ணம் கெட்டுப்போன வல்லமைசாலிகளின் கதியை நாம் சிறிது கவனித்துப் பார்ப்போமானால் நமது அங்கம் குலைந்துபோகாதா? உடன்பிறந்தே கொல்லும் நயவஞ்சகச் சத்துரு இதைவிட வேறு ஒன்று ஏது? இதற்கு நாம் இடங்கொடுப்போமாயின் இது நம்மைத் தன்வழியே இழுத்துக்கொண்டு போய் அதோகதியிற் றள்ளிவிடாதா? இது தன் சிநேகிதர்க்கு முதன் முதல் இன்னது வேண்டுமென்கிற

அவாவை யுண்டாக்குகிறது. பின்பு அப்பொருளிடத்து ஆசையை வளர்த்து அது கைகூடாதபோது கோபத்தை எழுப்புகின்றது. முடிவில் மன அமைதியைக் கெடுத்து எந்தவேளையிலும் துரோகச் சிந்தனையிலேயே நிலைத்திருக்கச் செய்கிறது.

துருவாச மகரிஷியைப்பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருக்கலாம். அவரோ மகாகோபி. இந்தக் கோபம் அவருக்கு எதனால் ஏற்பட்டது? அவர் கொண்ட அகங்காரத்தினாலேயாம். ஒரு காலத்தில் அம்பரீஷன் என்னும் அரசர்பிரான் துவாதசி விரதத்தை வழக்கப்படியநுஷ்டித்து சூரியோதயத்தில் பாரணை செய்யப்போகுந் தருணத்தில், துருவாசர் அவ் வேந்தன்முன் தோன்றினர்.

மகரிஷியைக் கண்டதும் அரசன் மிக்க பயபக்தியுடன், எதிர் சென்று பணிந்து ஏற்றபடி உபசரித்து எழுந்தருளவேண்டுமென்று பிரார்த்தித்துக்கொண்டான். முனிவர் "வேந்தே! இன்றைய போஜனம் நமக்கு உன் வீட்டிலேதான். இதோ யமுனா நதிக்குச் சென்று, நீராடி வருவோம்" என்று கூறியகன்றார். முனிவர் வருமளவும் அரசன் காத்திருக்க வேண்டியதாயிற்று. சூரியோதயத்திற் செய்யவேண்டிய பாரணை விரதம் முனிபுங்கவரால் தடைபடுவதாகத் தெரியவந்தது. அரசனுக்குக் கையுமாடவில்லை காலுமாடவில்லை.

நீராடச் சென்ற முனிவரோ "நம்மை இவ்வரசன் உள்ளபடி மதித்திருப்பானாயின் நம்மை விட்டுப் பாரணை செய்யான். நமது பராக்கிரமம் அவனுக்குத் தெரியவாராதா? இவனைப் போன்ற அரசர்களை ஆட்டிப் புடைக்க நமக்கு இதுதான் தகுந்த சமயம். ஆதலால் நாம் சாவகாச

மாகவே நீராடிப்போவோம்" என்று தமக்குள் நினைத்தவராய்க் காலதாமதஞ் செய்து கொண்டிருந்தார்.

முனிவர் விரைவில் திரும்பி வாராமையைக் கண்ட வேந்தன், விரத முகூர்த்தம் தப்பிவிடு மென்றஞ்சி, இதற்கென்ன செய்யலாம் என்று அருகேயிருந்த பெரியோர்களைக் கேட்டான். அவர்கள் எது தவறினாலும் குறித்த வேளை தவறுவது கூடாது.

(1) "சீலம் அல்லன நீக்கிச் செம்பொற்றுலைத்
தாலம் அன்ன தனிநிலை தாங்கிய
ஞால மன்னற்கு நல்லவர் நோக்கிய
காலம் அல்லது கண்ணும் உண்டாங்கொலோ"

(2) "பருவத்தோ டொட்ட ஒழுகல் திருவினைத்
தீராமை ஆர்க்கும் கயிறு"

என்று தரும சாஸ்திரங்கள் கூறுகின்றனவே.

ஆகையால் அந்த உரியகாலத்தில் ஆசமனீயமாவது செய்தால்தான் விரதபலன் சித்திக்கும். பிறகு முனிவர் வந்ததும் அவருடன் எல்லாக் கிரியைகளையும் கிரமப்படி செய்யலாம்" என்றார்கள். அரசனுக்கு அமைச்சர் சொல் வழி ஆற்றுதலே (செய்தலே) ஆற்றல் (வல்லமை). ஆதலால் அம்பரீஷன் பெரியோர் ஆக்யாபித்தபடி ஆசமனீயஞ் செய்து, துருவாசருடைய வரவை எதிர்நோக்கியிருந்தான்.

---

(1) தீயவற்றை யொழித்து, தராசுக்கோல்போ லாசு புரியும் வேந்தருக்கு எல்லா விஷயத்திலும் பெரியோர் குறிக்கும காலமே கண்ணை யொத்திருந்து காரியாநுகூலத்தைச் செய்யும்.

(2) அரசன் காலத்தோடு பொருந்தவினை செய்துஒழுகுவானானல், ஒருவரிடத்தும் நிலையாயிராமல் நீங்குஞ்செல்வத்தை அவனிடம் நீங்காதபடி பிணிப்பதற்கு அந்தக்காலமே கயிறாகும்.

துருவாசர் காவலன் தீர்த்தமுட்கொண்டதை அறிந்ததும் தம்முடைய உள்ளத்தைக் கவர்ந்தெழுந்து ஓங்கி வந்த கோபமாகிற வெள்ளமானது சத்வகுணமாகிற அணையைக் கடந்து செல்லும்படி விட்டுவிட்டார். அவருடைய கண்களிரண்டுஞ் செவ்வானம்போற் சிவந்துவிட்டன; நெருப்புப் பொறிகளைப் பரக்கவீசின; பற்கள் நெறநெற வென்று சப்திக்கலாயின. "அடா! வேந்தே! என்ன காரியஞ் செய்தாய்? வந்த அதிதியை மறந்து நீ ஆசமனங்கொள்ளத் துணிந்தாயல்லவா! என்னை இன்னுனென் றறியாயோ? இப்போதே என் வல்லமையைக் காட்டுகிறேன்பார். என் கோபத்தின் எதிர்நின்று பிழைத்தவர் இதுவரையில் ஒருவருமிலர்" என்று கூறிப் பத்துத் திக்கும் பதைத்து நடுங்க நகைத்தார்; சடாபாரத்தினின்றும் ஒரு சடையைப் பிடுங்கி, அம்பரீஷ மகாராஜன் முன் எறிந்தார். உடனே அங்கொரு பயங்கரத் தோற்றத்தைக்கொண்ட பூதம் வெளிக்கிளம்பியது.

இவ்வாறு தோன்றிய பூதம் முனிவரைப் பார்த்து "என்ன கட்டளை?" என்று வினவியது. முனிவர் "இதோ மதத்துநிற்கும் இம்மகிபதியைப் பட்சிக்கக் கடவாய்" என்றார். பூதம் தன் பகுவாயைத் திறந்துகொண்! அரசனை விழுங்க நெருங்கிற்று.

அப்போது இராஜேந்திரன் பகவானை நோக்கி "சுவாமி! அடியேன் நிரபராதி. இம்மகானுபாவரை அவமதிக்க வேண்டுமென்கிற எண்ணம் அடியேனிடங் கிஞ்சிற்றுமில்லை. எங்கும் நிறைந்து எல்லாமுணரவல்ல நீயே இச்சமயம் என்னைப் பாதுகாக்கவேண்டும். ஏடு ஆபத்சகாயா! அநாதரக்ஷகா! அபயம்—அபயம்" என்று நெஞ்சுருக நினைந்து அஞ்சலிபுரிந்தனன்.

அந்த நிமிஷமே, எங்குமில்லாத பேரொளியைக் கொண்டு, பகவானுடைய திருக்கரத்தில் வீற்றிருக்கும் சக்ராயுதம் அரசனுக்கும் முனிவருக்கும் இடையே தோன்றி நின்றது. அதன் கிரணமானது எதீசுரர் விடுத்த பூதத்தை யெரித்துச் சாம்பராக்கியது. இதைக் கண்ணுற்றதும் மகரிஷியானவர் மகத்தான பீதியை யடைந்தார். சக்கரமும் அவரைத் துரத்தத் தொடங்கியது. அதன் ஆற்றலுக் காற்றுத எதீந்திரர் விண்ணுலகுக் கோடினர்! அங்கு சாக்ஷாத் சிவபெருமானுடைய திருவடிகளில் விழுந்து தம்மை ரக்ஷித்தருளும்படி வேண்டிக் கொண்டனர்.

சிவபிரான் முனிவரைப்பார்த்து "மகரிஷியே! நானோ "அடியார்க் கெளியவன் அம்பலவாணன்" என்கிற பெயரைப் பிரசித்தமாகப் பெற்றவன். அம்பரீஷனோ பக்தியென்னும் வலையை வீசி, என்னையும் மற்ற தேவர்களையும் பிணித்து வைத்திருக்கிறான். அவனுடைய மகத்துவம் மிகவும் மேன்மை பொருந்தியது. நாங்கள் அவனைப் போன்ற அடியவருள்ளத்தில் அடங்கி யொடுங்கி யமர்ந்திருக்கிறோம். அவனுத்தரவின்றி யெங்களால் ஒன்றுஞ் செய்ய முடியாது. ஆகையால் நீ என்முன் நிற்கவேண்டாம்; வாய் திறந்து ஒன்றுஞ் சொல்லவேண்டாம்! நட! நட! சீக்கிரம் நட!" என்று சொல்லி யகற்றிவிட்டார்.

பிறகு துருவாசர் பிரமலோகஞ் சென்று பிதாமகனைச் சரண் புகுந்தார். சதுர்முகக் கடவுளும் தம்மாலொன்றுமாகாதென்று ஓட்டிவிட்டார். கடைசியாக முனிவர் வைகுண்டலோகம் போய்த் தம்மை ரக்ஷிக்கும்படி அதிவிநயமாய் வாசுதேவனைப் பிரார்த்தித்தார். பகவான் முனிவரை நோக்கி, "தபோநிதியே! நான் பக்தபராதீனன் என்

பது நீயறிந்தது தானே. அப்படியிருக்க நீ எப்படி என்னிடந் துணிவுகொண்டு வந்தாய்? நீ சாக்ஷிக்காரன் தயவை நாடுவதிலும், சண்டைக்காரன் தயவை நாடுவதே தலைமையாகும். எந்த இடத்தில் நீ அபசாரப்பட்டாயோ அந்த இடத்திலேயே சரணுகதனுகக் கடவாய். அங்கு நீ ரக்ஷகம் பெறுவாய், உடனேசெல்வாயாக" என்று பணித்தனர்.

துருவாசர் தமக்கு ஆதரவு வேறெங்குங் காணுதவராய், அம்பரீஷமகாராஜனையே அடைக்கலம் புகுந்தார்.

மகாராஜன் சக்கரத்தை மறையுமாறு துதிக்க, அத்திருப்படை அந்தர்த்தானமாயிற்று. துருவாசரும் "இன்ருேடு என் அகங்காரம் என்னைவிட் டொழிந்தது. இனி அதை மறந்தும் நேசியேன்" என்று சொல்லி, அம்பரீஷனுக்கு அநேக ஆசிகள் கூறித் தமதிடஞ் சென்ருர்.

பார்த்தீர்களா பிள்ளைகளே! அகங்காரம் ரிஷீசுவரரையும் ஓராட்டம் ஆட்டிவிட்டதென்ருல் நம்மை அது என்னபாடுதான் படுத்தாது. அது நம்மிடம் பொருந்தியிராதபடி நாம் மிகவும் விழிப்பா யிருக்கவேண்டும். இன்னும் இந்த அகங்காரத்தால் அவமதிப் படைந்தவர்கள் பலர் இருக்கின்றனர் அவர்களுள் பலராமர், கருடபகவான், சத்தியபாமை, அருச்சுனன் என்பவர்களுடைய சரித்திரங்களையும் சொல்லுகிறேன் கேட்பீராக—

(வரும்)

ம. இராஜகோபால பிள்ளை,
வித்வான், கோமளேசுவரன் பேட்டை, சென்னை.

## ஹாஸ்யம்.

### அநுபவமில்லாத அநுசன்,

**நந்தன்:—அண்ணு!** நமது ஊரில் நடக்கும் சுபகாரியங்களுக்கும் அசுபகாரியங்களுக்கும் நீரே போய் வருகிறீரே; என்னை யேன் ஒரு சமயமாவது அனுப்பக்கூடாது?

**கந்தன்:—தம்பி!** நீ கல்வியை அசட்டை செய்து படிக்காமல் விட்டு விட்டாய். அதனுல் எவரிடத்தில் எப்படி நடந்து கொள்ள வேண்டுமோ அந்த தன்மை உனக்குத்தெரியாது.

**நந்:—**" அப்படியா? அந்த வித்தை யென்ன பிரமவித்தையா!" என்று தனக்குள் எண்ணி, ஒரு சமயம் ஒரு வீட்டில் ஒருவருடைய தாயார் இறந்துவிட அப்போது விசாரிக்கப் போன சிலபேர்களுடன் தானும் போனுன். போனவர்கள் ஒவ்வொருவரும் அந்த வீட்டுக்காரனை நோக்கி "அப்பா! பிறந்தவர் இறப்பது சகஜம். ஆனுல் உன் தாயாரோ மகா நல்லவர். அந்தம்மாள் உனக்குமாத்திரம் தாய் என்று நீ நினையாதே. எனக்கும் தாய்தான். இந்த ஊரிலிருப்பவர் அனைவருக்கும் தாய்தான். என்ன செய்யலாம்—நாம் கொடுத்து வைத்தது அவ்வளவுதான் விசனப்படாதே" என்று சொல்லித் தேற்றினுர்கள். இதைக் கேட்டிருந்த நந்தன் "உலக உபசாரம் இப்படிப்பட்டதென்று நாம் இப்போது தெரிந்து கொண்டோம். இனி நாமும் போய் இவ்வாறே விசாரித்துப் பெருமையடைய வேண்டும். இந்த உபசரிப்பு நமக்குத் தெரியாதென்றல்லவர் நமது அண்ணன் நம்மை எங்கும் அனுப்புவதில்லை" என்று தீர்மானித்துக் கொண்டான்.

சிலநாளில் ஒருவனுடைய மனைவி இறந்து போயினள். அப்போது தான் போய் விசாரித்து வரவேண்டுமென்று தன் அண்ணனை வற்புறுத்தினுன். போய்வா உன் ஆசையை நானேன் கெடுக்கவேண்டும் என்று கந்தன் சொன்னுன். நந்தன் சரியென்று யாவருக்கும் முன்னதாகச் சென்று இறந்தவளுடைய கணவனைநோக்கி "அப்பா! நீ என் வீணுக அழுகிருய்? சாவு எல்லோருக்கும் உரியதுதானே. ஆனுல் உன் மனைவி மிகவும் நல்லவள். அவள் உனக்குமாத்திரம் மனைவியென்று நினையாதே. எனக்கும் மனைவிதான். இந்த ஊரில் உள்ளாரெல்லாருக்கும் மனைவிதான். கைநழுவிப் போனதற்கு என் கலங்கவேண்டும்?" என்றுன். இந்தப்பேச்சைக் கேட்டதும் செத்தவளுடைய புருஷனுக்கு இருந்த விசனம் போய்க் கோபம் பெருகியது. உடனே அவன் நந்தனை முன்பின் பாராமல் கன்னத்திலறைந்து உதையும் குத்தும் போதுமானவரையிலுதவி வெளியே துரத்திவிட்டான். நந்தன் உலக நடையை முழுவதும் அறியாதவர் எவ்வித உபசரிப்பிற்கும் தலையிடலாகாது என்று அடங்கிவிட்டான்.

பூமிமெச்சிடு மண்ணுமலைக்கோர் துணையானவன் என்ற
காவடிச்சிந்து மெட்டு.

## சுப்ரமண்யர் துதி

சிட்டர்கள் கூறிடு மட்டிலா நீதியைத் தள்ளாதே
சினங் கொள்ளாதே, தீமை யுள்ளாதே—யென்றுஞ்
சீரியநாவல, ராரையுநாவினு, லெள்ளாதே. 1.

திட்டத்தனமிகு மட்டியர் சேர்க்கையை விட்டாயே
பாபங் கிட்டாயே யருள் தொட்டாயே—நாளும்
தூய்மை யாகுமீசன் வாய்மை பேசும்வழி நட்டாயே 2.

என்ன துன்பம்வரினும்மினி பொய்யேநீ சொல்லாதே
வஞ்சங் கல்லாதே புன்மை நில்லாதே—கேளாய்
எந்தக் காலும் பாவஞ்—சந்தப்புண் யந்தனை வெல்லாதே 3.

முன்தீவினைப்பய னுலெடுத்தோ மிப்புன் ஜன்மமே
இன்னும் வன்மமே செய்யின் கன்மமே—யிதை
முன்னி நாடோறும் நீ—நன்மையுடன் செய்வாய் தன்மமே 4.

பிறக்கும்போது ஒன்றுங் கையுடன் கொடுவந்த தில்லையே
சற்று நில்லையே இது தொல்லையே—அல்லால்
இறக்கும் போதொன்றுந்—திறமுடன் வருகுமோசொல்லையே.

உறக்க நிகர்வது சாவென்றே சொல்லுவ துண்மையே
வரும் அண்மையே யிது திண்மையே—யென்று
முண்மை யல்லதிந்த—வண்மையுலகினில் எண்மையே 6.

முருக வென்று தின, முருகிச் செயல்தோறுஞ் சொல்வையே
கன்மங் கொல்வையே யின்பம் புல்வையே—யினி
முருகு கோபமுடன்—வருகு நமனையும் வெல்வையே 7.

பெருகு அன்புமிகுங் கணபதி சுப்பிர மண்யமே
பேசுங் கண்யமே யுயர் புண்யமே—நீயும்
பெட்பென் மனந்தனில்—திட்பமாய் வைத்தலா வண்யமே.

S. R, கணபதி சுப்ரமண்ய ஐயர்,
தமிழ்ப் பண்டிதர், போர்டு ஹைஸ்கூல், கொள்ளேகாலம்.

ஆவணக் காப்பக

THE TATA PRINTING WORKS, 5, THAMBU CHETTY ST., MADRAS.

186455

வெளியாய்விட்டது. மூன்றும்பதிப்பு.

# சுப்ரமண்யர் தோத்திரக்கொத்து

இப்புத்தகத்தில் நூறு பாடல்கள்; அடங்கியுள்ளன. அதாவது, பத்துவிதமான பதிகங்கள், இப்பத்துப் பதிகங்களும் திருச்செந்தில், திருவேரகம் முதலிய ஆறு ஸ்தலங்களில் விளங்கும் ஆண்டவன்மேற் பாடியவையாம். ஒவ்வொன்றிலும் பக்திப்ரவாகத்திலிருந்து உண்டாகிய அமுதமெனப் பகரத்தக்க சொல்லும், பொருளும், சுவையும் அமைந்துள்ளன. இதனை இயற்றிய பாலஸரஸ்வதி தேவகுஞ்சரியம்மாள் என்னும் ஒரு பிராமணமாது தமக்கு நேர்ந்த ஒரு கொடியநோய் தீரும்பொருட்டு இப்பதிகங்களைப்பாடிச் சுகமடைந்தமையால் இவற்றைப் புத்தக ரூபமாக வெளியிடலானோம். பக்திமான்கள் யாவரும் இப்புத்தகத்திலொன்று வாங்கிப் படித்து ஆண்டவனைத் துதித்து அவர் கருணைக்குப் பாத்திரவான்களாவார்களென நம்புகிறோம்.

இதில் ஆண்டவன் திருவுருவம் ஒன்று முன்பக்கத்தில் அமைத்துள்ளது. இது பாக்கெட் அளவுள்ளது.

இதன் விலை அணா 4

இப்பதிப்பில் கிரகமணிமாலை, 9-பாடல்கள் புதிதாகச் சேர்க்கப்பட்டிருக்கிறது.

---

விலாசம்:—மானேஜர், பாலவிநோதினி ஆபீசு,

இராயப்பேட்டை போஸ்டு, சென்னை.

10035/81

# கண் வைத்தியம்

எமது நண்பர்களில் பலர் எமது வைத்தியசாலையில் கண்வைத்தியமும் நடத்தினால் அநுகூலமாயிருக்குமென்று கேட்டுக்கொண்டதின் பேரில், ஆயுர்வேத கண் வைத்திய சாஸ்திரத்தைக் கற்றுணர்ந்தவரும், தஞ்சாவூர் சமஸ்தான அரண்மனை கண்வைத்தியரும், மெடல் பெற்றவரும், கண் வைத்தியத்தில் ஸ்பெஷலிஸ்டுமாகிய Mr. T. S. அமிர்தலிங்கம் பிள்ளையை வரவழைத்திருக்கிறோம். கண்ணிலுண்டாகும் கண்ணோய், அமரம், பில்லம், அன்னகோபம் முதலிய சாஸ்திர சம்பந்தமான வியாதிகளையும், அடிபட்ட கண்கள், குந்தம் தள்ளிய கண்கள், பூவிழுந்த கண்கள் இன்னும் அநேகவிதமான கண் வியாதிகளையும், எரிச்சல், உறுத்தல் முதலிய கொடுமையில்லாத உயர்ந்த ஔஷதங்களைக் கொண்டு, ஆப்பரேஷன் இல்லாமல் சௌக்கியப்படுத்தப்படும். ஏழைகளுக்கு இலவசமாய் வைத்தியம் செய்யப்படும்.

நோயாளிகளை காலை 7-மணி முதல் 9-மணி வரையிலும் மாலை 4-மணி முதல் 6-மணி வரையிலும் கவனிக்கப்படும்.

☞ டாக்டர் வி. ஆர். சுந்தரம்,

"ஆயுர்வேத வைத்திய மந்திரம்"

பைகிராப்ட்ஸ் ரோட்,

இராயப்பேட்டை, சென்னை.